பட்டிருக்கிறது. ஆகவே 'இ' நோட்டிஸ் கொடுக்கும் நிலை நில மதிப்பு முதல் தவணை தொகை வசூல் செய்தல் மற்றும் 'எப்' படிவ பட்டா வழங்குதல் சம்பந்தப்பட்ட 2,935.90 ஏக்கரைப் பொறுத்தவரையில் அவை படிப்படியாக 2 ஆண்டுகளிலிருந்து 3 ஆண்டுகளுக்குள்ளாக இவைகளை எல்லாம் பைசல் செய்துவிட முடியும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மற்றவைகளைப் பொறுத்தவரையிலும் உட்பிரிவு ஆவணங்கள் தயார் செய்வதற்காக நில அளவைப் பணியாளர் போதுமான அளவுக்கு இல்லை என்றும் அவர்கள் அதிகம் தேவைப்படுகிறார்கள் என்றும் அவர்கள் அதிகம் நியமிக்கப்பட்டால்தான் விரைவாக நடத்தமுடியும் என்றும் செயற்குறிப்பு இருக்கிறது. அது அரசின் ஆய்வில் இருக்கிறது. அதிகமாக நியமித்து 2, 3 ஆண்டுகளுக்குள்ளாக இந்தப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

தாம்பரம் சுங்கச் சாவடி அலுவலகம்.

629 (*வினா எண் 9419)—திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் மேற்கு கக்கன் தெருவில் 10 செண்ட் நிலத்தில் தமிழ்நாடு அரசு சுங்கச் சாவடி அலுவலகம் அமைக்க ஒதுக்கிய இடத்தை தனி நபர் ஒருவர் ஆக்கிரமித்துள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும்(ஆ) ஆக்கிரமிப்பு ஏதுமில்லை.

[முற்பகல் 10-10]

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சுங்கச் சாவடிக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் இப்பொழுது மிகப் பெரிய ஒரு கட்டிடம் இருக்கிறது. எந்த அடிப்படையிலே அந்தக் கட்டிடம் கட்டுவதற்குத் தனியாருக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டம், சைதை வட்டம், தாம்பரம் கிராமம் புல எண். 329-1-பி. 1-ல் உள்ள 0.10 ஏக்கர் பரப்பு தமிழ்நாடு அரசு சாவடி என கிராம சுவடியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிலம் அரசாணை எண். 3438, வருவாய்த்துறை, நாள் : 24—9—1974-ல் டாக்டர் சி. ஜே. அலெக்சாண்டர் என்பவருக்கு ரூ. 15,641-க்குக் கிரையப் வசூலித்துக் கொண்டு ஒப்படை செய்ய அரசு உத்தரவு

வழங்கப்பட்டுள்ளது. அதில் அவர் தற்போது கட்டிடம் கட்டி பிலிப்ஸ் என்ற பெயரில் மருத்துவ மனையை நடத்தி வருகிறார் மேற்படி நிலம் அரசாணையின்படிதான் ஒப்படை செய்யப் பட்டது ; ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை.

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடம் மிகவும் மதிப்பு வாய்ந்த ஒரு இடமாக இருந்தும், அதைத் தனி நபருக்குப் பட்டா செய்திருக் கின்றார்கள். இனியேனும் அதுபோன்ற விவகாரங்களில், அங்குள்ள மக்களின் கருத்தை அறிந்து செயல்படுத்துவதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1974-லேயே நடைபெற்றிருக் கிறது. அப்பொழுதே அங்கேயிருக்கிற பொதுமக்களோ, அங்கே யிருக்கிற நகராட்சி மன்றமோ ஆட்சேபணை எழுப்பியிருப்பார் களோ, என்னவோ தெரியாது. எழுப்பி இருப்பார்களேயானால் அதுபற்றி ஆராய்ந்து தக்க ஒரு முடிவு எடுக்க முடியும். ஆனால், அப்படிப்பட்ட இடங்கள் ஒப்படைக்கப்படுகின்ற சூழ்நிலையில் பொது மக்களோ மற்றவர்களோ ஆட்சேபணை எழுப்புவார்களே யானால் அதைப்பற்றி பரிசீலித்துதான் வருவாய்த்துறையும் மற்றும் அரசும் முடிவெடுக்கும்.

காமராஜர் மாவட்டம், விருதுநகர் தலைமை மருத்துவமனை.

630 (*வினா எண் 8518)—திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காமராஜர் மாவட்டம், விருதுநகர் தலைமை மருத்துவ மனையில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை எத்தனை ?

(ஆ) அதனை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 132.

(ஆ) ஆம்.

(இ) தலைமையிட மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த மேலும் 48 படுக்கைகள் வசதி கொண்ட கூடுதல் பிரிவு கட்டிடம் மற்றும் அறுவையரங்கு, பிணவறை ஆகியவை கொண்ட கட்டிடங்கள் கட்ட ஆணை வழங்கப்பட்டு கட்டிட வேலைகள் நடைபெற்று வருகின்றன.